(ஏ) தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக நிர்வாகக் குழுவிற்கு உறுப்பினர் தேர்வு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழக நிர்வாகக் குழுவிற்கு (Board of Management) மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வெ. புருஷோத்தமன் அவர்களிடமிருந்து முறையாக (மேசை சையைத் தட்டும் ஒலி) நியமனத்தாள் வரப்பெற்றுள்ளது. தேர்ந் தெடுக்கப்பெற வேண்டிய எண்ணிக்கையும், முறையாக வரப் பெற்றுள்ள நியமனத்தாள்கள் எண்ணிக்கையும் சமமாக இருப் பதால் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வெ. புருஷோத்தமன் அவர்களை அந்தப் பதவிக்கு முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டுள் ளதாக அறிவிக்கிறேன்.

(ஐ) பேரவை நிறைவேற்றிய அலுவல்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நம்முடைய தமிழ்நாடு சட்டமன்ற 10-வது பேரவையின் இந்த 7-வது கூட்டத் தொடர் 16-3-1994 அன்று தொடங்கி இன்று வரையிலும் சிறப்பாகவும், பலரும் பாராட்டத்தக்க வகையிலேயும் நடை பெற்று முடிந்துள்ளது.

இந்தப் பேரவைத் தொடர் கூட்டம் தொடங்குவதற்கு முன்னர் இந்தப் பேரவை தொடர் கூட்டம் தொடங்குமா; எப்படித் தொடங்கும்; எந்த எந்த அலுவல்களை எடுத்துக் கொள்ளும் : இது இருக்குமா; இது இருக்காதா; என்று எல்லாம் பலர் பலவிதமான அபிப்பிராயங்களைச் சொல்லி இந்தப் பேர வைக் கூட்டம் எந்த வகையிலேயும் தொடர்ந்து நடந்து முடியும் என்கிற அளவுக்குக் கூட இருக்குமா; என்று எல்லாம் கூட வெளியிலே பல்வேறு வகையினரும் பல்வேறு ஐயங்களைத் தெரிவித் துக் கொண்டு இருந்ததை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவீர்கள். அத்தனையையும் மீறி இந்தப் பேரவைத் தொடர் கூட்டம் சிறப் பாகவும் நம்முடைய சட்டமன்றப் பேரவைக்கு இருக்கக்கூடிய பழம்பெரும் சிறப்புகளை எல்லாம் இன்னும் தன்னகத்தே பெற்று இருப்பது இந்தப் பேரவைதான் என்று நிலை நாட்டுகிற வகையில் (மேசையைத் தட்டும் ஒலி) ஆளுநருடைய உரையோடு தொடங்கி அதன் பின்னர் நிதிநிலை அறிக்கையும் இங்கே வைக்கப்பட்டு நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதமும், பல்வேறு மானியக் கோரிக்கைகள் மீதான விவாதமும் அனைத்தும் முறையாக நடை பெற்று இன்று வரையிலும் சிறப்பாக நடைபெற்று இருக்கிறது என்பதைப் பேரவைக்கு அறிவிக்கப் பெரிதும் மகிழ்ச்சி கொள் கிறேன்.

அந்த அளவுக்குத் தொடங்கி நடைபெற்று இருக்கிற இந்தப் பேரவைக் கூட்டம் மொத்தத்தில் கூடிய மொத்த நாட்கள் ஆளுநர் உரையாற்றிய நாள் உட்பட 34. மாலையிலும்